வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,
ந.க.எண்:949/மா1/நா.மு–CG/ஒபக/2023, நாள்: 27.06.2023

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அரசு பள்ளிகளில் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உயர் கல்வி சார்ந்து வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் தொடர்பாக ஒரு பள்ளிக்கு ஒரு உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் தேர்ந்தெடுத்தல் – சார்பு.

பார்வை: இயக்குனரகம் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) சென்னை – 600 006 மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள், பிறப்பிப்பவர். டாக்டர் எம்.ஆர்த்தி இ.ஆ.ப., ந.க.எண்.98/L1/CG – 16 /2023, நாள்: 21.06.2023.

-------

பார்வையில் காணும் அரசாணையில் பள்ளி கல்வி துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 6 ல் அனைத்து அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். அதற்கென, தனியே கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>"நான் முதல்வன்" திட்டம்</u>**

இதன் அடிப்படையில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்க பயிற்சி புத்தகம் தயாரிக்கப்பட்டு. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் மாநில அளவிலான பயிற்சிகள் DIET விரிவுரையாளர்களுக்கும் மற்றம் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில் 9 மற்றம் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முதன்மைக் கருத்தாளர்கள் வாயிலாக அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து பள்ளிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்கல்வி குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிக்காட்டுதல்கள் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>தலைமையாசிரியர் பொறுப்புகள் :</u>**

1. சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள், ஆர்வமிக்க ஒரு ஆசிரியரை தேர்ந்தெடுத்தல்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியரின் விவரங்களை 30.06.2023க்குள் EMIS இணைய தளத்தில் வாயிலாக பதிவேற்றம் செய்திட வேண்டும்.

மேற்காணும் அனைத்து தகவல்களையும் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

27/6/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6.

27/6/23

பெறுநர்:

அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. மாநிலத் திட்ட இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மவாட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (மேல்நிலை), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கைக்காக)